பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை - 4

**16 06 2026** **TUESDAY** **6.30 PM**

மாநிலச்செய்திகள்

தலைப்புச் செய்திகள்

**1)** பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையிலான அரசு கடந்த **12** ஆண்டுகளில் நாட்டின் உள்கட்டமைப்பில் பெரிய மாற்றங்களை கொண்டுவந்துள்ளதாக பிஜேபி தலைவர் திரு நிதின் நபின் கூறியுள்ளார்.

**2)** தமிழகத்தில் மின் கட்டமைப்பை வலுப்படுத்த **231** புதிய துணை மின் நிலையங்களை அமைக்க முதலமைச்சர் திரு விஜய் உத்தரவிட்டுள்ளார்.

**3)** தமிழக அரசுக்கு பத்து லட்சம் கோடி ரூபாய் கடன் நிலுவையில் உள்ளதாக மாநில நிதியமைச்சர் திரு மரியவில்சன் தெரிவித்துள்ளார்.

**4)** பெண்களுக்கு மாதந்தோறும் **2** ஆயிரத்து **500** ரூபாய் வழங்கப்படும் என்ற தேர்தல் வாக்குறுதியை தவெக அரசு உடனடியாக நிறைவேற்ற வேண்டும் என்று மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் வலியுறுத்தியுள்ளார்.

**5)** விவசாயிகளின் பயிர்க்கடனை மாநில அரசு முழுமையாக ரத்து செய்ய வேண்டும் என்று அஇஅதிமுக, பிஜேபி உள்ளிட்ட கட்சிகள் வலியுறுத்தியுள்ளன.

. . இனி விரிவான செய்திகள் . . .

<<<<<>>>>>>>

பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையிலான அரசு கடந்த 12 ஆண்டுகளில் நாட்டின் உள்கட்டமைப்பில் பெரிய மாற்றங்களை கொண்டுவந்துள்ளதாக பிஜேபி தலைவர் திரு நிதின் நபின் கூறியுள்ளார்.

அவர் இன்று வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில், போக்குவரத்து கட்டமைப்பு வலுப்படுத்தப்பட்டிருப்பதன்மூலம், நாட்டின் பல பகுதிகள் இணைக்கப்பட்டிருப்பதாகவும், புதிய வாய்ப்புகள் உருவாகியிருப்பதாகவும் கூறியுள்ளார்.

தேசிய நெடுஞ்சாலைகள் 91 ஆயிரம் கிலோமீட்டரிலிருந்து, ஒரு லட்சத்து 46 ஆயிரம் கிலோமீட்டராக உயர்ந்துள்ளதையும், மெட்ரோ ரயில்வே கட்டமைப்பு 250 கிலோமீட்டரிலிருந்து, ஆயிரத்து 200 கிலோமீட்டர் தூரத்திற்கு விரிவுபடுத்தப்பட்டள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

கடந்த 12 ஆண்டுகளில் நாட்டில் உள்ள விமான நிலையங்களின் எண்ணிக்கை இரட்டிப்பாகியிருப்பதாகவும் திரு நிதின் நபின் கூறியுள்ளார்.

<<<<<>>>>>>>

தமிழகத்தில் மின் கட்டமைப்பை வலுப்படுத்த 15 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பீட்டில் 231 புதிய துணை மின் நிலையங்களை அமைக்க முதலமைச்சர் திரு விஜய் உத்தரவிட்டுள்ளார்.

சென்னையில் இன்று நடைபெற்ற எரிசக்தி துறை சார்ந்த ஆய்வுக் கூட்டத்தில், மின் பழுதுகளை சரி செய்ய 15 ஆயிரம் மின் பணியாளர்களை நியமிக்க வேண்டும் என்றும் அதிகாரிகளுக்கு அவர் அறிவுறுத்தினார்.

மாநிலத்தில் மின் உற்பத்தி மற்றும் மின் கொள்முதல் போதுமான அளவில் இருப்பதால், மின் பற்றாக்குறை இல்லை என்றும் இக்கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

சென்னை உள்ளிட்ட நகர்ப்புறங்களில் சில இடங்களில் உள்ள பழமையான மின் கட்டமைப்புகள், நிலத்தடி கேபிள் பழுதுகள் போன்ற காரணங்களினால் மின் பகிர்மான அளவில் அவ்வப்போது தடை ஏற்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இப்பிரச்சினைகளுக்கு நிரந்தர தீர்வுகாண, மின் விநியோக கட்டமைப்பை மேம்படுத்துவதற்கான திட்டங்கள் செயல்படுத்தப்படும் என்றும் இந்த ஆய்வுக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

மின் விநியோக சேவையை மேம்படுத்தும் வகையில், கூடுதலாக 77 மின் தடை நீக்க மையங்கள் அமைக்கப்படும் என்றும், இதற்கு தேவையான பணியாளர்கள் மற்றும் கட்டமைப்புகளை ஏற்படுத்தவும் முதலமைச்சர் உத்தரவிட்டார்.

24 மணிநேரமும் செயல்படும் மின்னகம் மூலமாக அளிக்கப்படும் பொதுமக்களின் புகார்களுக்கு உடனுக்குடன் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் ஆய்வுக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

மின் தடையை நீக்க 125 குழுக்கள் சுற்றுப்பணியில் ஈடுபடுத்தப்படும் என்றும் முதலமைச்சர் திரு விஜய் தலைமையில் நடைபெற்ற எரிசக்தி துறை சார்ந்த ஆய்வுக்கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

இந்த ஆய்வுக்கூட்டத்தில், மின்துறை அமைச்சர் திரு நிர்மல் குமார், தலைமைச்செயலாளர் டாக்டர் சாய்குமார், மின்வாரிய தலைவர் டாக்டர் ஜெ ராதாகிருஷ்ணன் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

<<<<<>>>>>>>

தமிழக அரசுக்கு பத்து லட்சம் கோடி ரூபாய் கடன் நிலுவையில் உள்ளதாக மாநில நிதியமைச்சர் திரு மரியவில்சன் தெரிவித்துள்ளார்.

சென்னையில் இன்று மாநில அரசின் நிதிநிலை குறித்த வெள்ளை அறிக்கையை வெளியிட்டு பேசிய அவர், தமிழகத்திற்கு 78 ஆயிரத்து 324 கோடி ரூபாய் வருவாய் பற்றாக்குறை உள்ளதாகவும் கூறினார்.

கடந்த ஐந்தாண்டு திமுக ஆட்சியில் மாநிலத்தின் கடன் அளவு இரட்டிப்பாகி இருப்பதாகவும் திரு மரியவில்சன் தெரிவித்தார்.

*(Sound Byte — மரிய வில்சன் — 30 Sec. )*

<<<<<>>>>>>>

பெண்களுக்கு மாதந்தோறும் **2** ஆயிரத்து **500** ரூபாய் வழங்கப்படும் என்ற தேர்தல் வாக்குறுதியை உடனடியாக நிறைவேற்ற வேண்டும் என்று மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் தமிழக அரசை வலியுறுத்தியுள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள சமூகவலைதளப் பதிவில், முதலமைச்சர் திரு. விஜய் தலைமையிலான த.வெ.க. அரசு தேர்தல் வாக்குறுதியை நிறைவேற்றாமல் பெண்களை ஏமாற்றிவிட்டதாக குற்றம் சாட்டியுள்ளார்.

மேற்குவங்கத்தில் பிஜேபி அறிவித்த வாக்குறுதியின்படி பெண்களுக்கு மாதம் மூவாயிரம் ரூபாய் வழங்கப்பட்டு வருவதை டாக்டர் எல். முருகன் அந்த பதிவில் சுட்டிக்காட்டியுள்ளார்.

<<<<<>>>>>>>

தவெக அரசு தேர்தலின்போது அளித்த வாக்குறுதியின்படி, குறு-சிறு விவசாயிகள் கூட்டுறவு வங்கிகளில் வாங்கியுள்ள பயிர்க்கடன்களை முழுமையாக தள்ளுபடி செய்யாமல், தவணை முறையில் அறிவிப்புகளை வெளியிடுவதாக அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு எடப்பாடி பழனிசாமி குற்றம் சாட்டியுள்ளார்.

மாநில அரசு இன்று வெளியிட்டுள்ள அறிவிப்பில், 75 ஆயிரம் ரூபாய் வரை விவசாயக்கடன் பெற்றுள்ளவர்களுக்கு மட்டும் பயிர்க்கடன் முழுமையாக தள்ளுபடி செய்யப்படும் என்றும், 75 ஆயிரத்திற்கு மேல் கடன் பெற்றவர்களுக்கு 35 ஆயிரம் ரூபாய் வரை தள்ளுபடி செய்யப்படும் என்ற அறிவிப்பு விவசாயிகளின் சுமையை குறைக்காது என்று கூறியுள்ளார்.

சிறு-குறு விவசாயிகள் ஒரே சமூக பொருளாதார நிலையில் உள்ளதாகவும், எவ்வித பாரபட்சமும் இன்றி பயர்க்கடன்கள் முழுமையாக தள்ளுபடி செய்ய வேண்டும் என்றும் திரு எடப்பாடி பழனிசாமி வலியுறுத்தியுள்ளார்.

பிஜேபி ஆளும் மகாராஷ்ட்ரா உள்ளிட்ட மாநிலங்களில் விவசாயிகளின் பயிர்க்கடன்கள் முழுமையாக தள்ளுபடி செய்யப்பட்டிருப்பதாக கூறியுள்ள பிஜேபி மாநிலத்தலைவர் திரு நயினார் நாகேந்திரன், தவெக அரசு தேர்தலின்போது அளித்த வாக்குறுதியை நிறைவேற்ற தவறிவிட்டதாகவும் குற்றம் சாட்டியுள்ளார்.

சிறு-குறு விவசாயிகளின் பயிர்க்கடனை முழுமையாக தள்ளுபடி செய்ய மாநில அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பாமக தலைவர் டாக்டர் அன்புமணி ராமதாஸ் வலியுறுத்தியுள்ளார்.

அமமுக பொதுச்செயலாளர் திரு டி டி வி தினகரன், தமிழ்நாடு விவசாயிகள் சங்க பொதுச்செயலாளர் திரு மாசிலாமணி உள்ளிட்டோரும் விவசாயிகளின் பயர்க்கடனை முழுமையாக தள்ளுபடி செய்ய வேண்டும் என்று மாநில அரசை வலியுறுத்தியுள்ளனர்.

<<<<<>>>>>>>>

விராலிமலை தொகுதி அஇஅதிமுக சட்டப்பேரவை உறுப்பினர் டாக்டர் சி விஜயபாஸ்கர் இன்று தமது பதவியை ராஜினாமா செய்துள்ளார்.

அவரது ராஜினாமா ஏற்றுக் கொள்ளப்பட்டிருப்பதாக பேரவைத் தலைவர் திரு ஜே சி டி பிரபாகர் தெரிவித்துள்ளார்.

சட்டப்பேரவை உறுப்பினர் பதவியை ராஜினாமா செய்தபின் அஇஅதிமுக-விலிருந்து தாம் விலகுவதாகவும் திரு விஜயபாஸ்கர் அறிவித்துள்ளார்.

<<<<<>>>>>>>>

நீலகிரி, திண்டுக்கல், தேனி, மதுரை, சிவகங்கை, தஞ்சாவூர் மற்றும் ராமநாதபுரம் மாவட்டங்களில் நாளை, இடி மின்னலுடன் கனமழை பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வு மையத்தின் தென் மண்டல இயக்குநர் டாக்டர் வி ஆர் துரை தெரிவித்துள்ளார்.

***(Sound Byte — வி ஆர் துரை - 40 Sec. )***

<<<<<<>>>>>>>

*மாவட்டச் செய்திகள்*

வேலூர் மாவட்டம் காட்பாடியில் போதைப்பொருள் பயன்பாட்டை தடுப்பது குறித்து பள்ளி மாணவ, மாணவியருக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் நிகழ்ச்சியை மாவட்ட ஆட்சியர் திருமதி லீலா அலக்ஸ் இன்று தொடங்கி வைத்தார்.

---------------

நாகப்பட்டினம் மாவட்ட கால்நடை மருத்துவமனை மற்றும் மாவட்ட நூலகம் - அறிவுசார் மையத்தில் மாவட்ட ஆட்சியர் திரு பிரவீன்குமார் ஆய்வு மேற்கொண்டார்.

------------

திருப்பத்தூர் மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையத்தில் வரும் 19-ஆம் தேதி தனியார் துறை வேலைவாய்ப்பு முகாம் நடைபெற உள்ளதாக ஆட்சியர் திரு ரவிகுமார் தெரிவித்துள்ளார்.

---------------

*விளையாட்டுச் செய்திகள்*

பிரான்ஸ் சர்வதேச பாரா பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் **Alphia James — Pallavi** இணை இரண்டாவது சுற்றுக்கு முன்னேறியுள்ளது.

இன்று தொடங்கிய இப்போட்டியில் ஆடவர் இரட்டையர் பிரிவில் இந்தியாவின் **Prem Kumar — Abu Hubaida** இணையும், **Munna Khalid — Shashank Kumar** இணையும் இரண்டாவது சுற்றுக்கு முன்னேறியுள்ளனர்.

ஆடவர் ஒற்றையர் பிரிவில் **Shashank Kumar** இரண்டாவது சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

**<<<<<END>>>>>>**